பிரபாக் (Brabag) எண்ணெய் சுத்தி செய்யுமிடம்.—மாக்டீபர்க் (Magdeburg).		
ட்யூராக் (Deurag) எண்ணெய் ஆலை.—ஹானோவர் (Hanover).	......	தீப்பிடித்தது.
விமான நிலயங்கள்.—கேயன் (Caen), அப்பீவில் (Abbeville), க்வேகன்ப்ரக் (Quakenbruck), டெக்ஸல் (Texel) தீவு.	......	அதிகச் சேதம்.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
21—8—40 (புதன் கிழமை)—தொடர்ச்சி.			
	முக்கியமான ரயில் பாதைகள்.—ரூர் (Ruhr), ரைன்லாண்டு (Rhineland).		
	சாமான்கள் ஏற்றிச் செல்லும் ரயில் வண்டி.—ஹீன்பர்க்கு(Heinburg)க்கும், வெர்டனு (Verden)க்கும் நடுவிலுள்ள குகையில்.	ஒரு விமானம்.	சேதமாயிற்று.
22—8—40 (வியாழக்கிழமை).			
	எண்ணெய் ஆலை.—பொட்ராப் (Bottrop).		தீப்பிடித்தது.
	விமான உற்பத்தி சாலை.—பிராங்பர்ட் (Frankfurt).		
	மின்சார உற்பத்திசாலை.—நாப்ஸாக் (Knapsack).		
	வெடிகுண்டு உற்பத்தி சாலை.—க்ரஷீம் (Gresheim).		
	கப்பல் நிற்கும் இடங்கள்.—ரைன் நதிக் கரையிலுள்ள டுயிபர்க் (Duisburg).		
	ரயில்வே ஜங்ஷன்கள்.—மான்ஹீம் (Mannheim), காப்லென்ஸ் (Coblenz).		
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest).		
	22 விமான நிலயங்கள்.—ஜெர்மனியிலும், அது ஆக்ரமித்திருக்கும் நாடுகளிலும், சாடோரூக்ஸ் (Chateux Roux), டூர்ஸ் (Tours), ஆர்லியன்ஸ் (Orleans).	ஒரு விமானம்.	பலத்த சேதம்.
	அரசாங்க காரியாலயங்கள்.—மொகாடிஸ்ஸியோ (Mogadiscio).	நஷ்டமில்லை.	கம்பியில்லா தந்தி நிலயம் தீப்பிடித்தது.
	விமான நிலயம்.—டெஸ்ஸி (Dessie).	நஷ்டமில்லை.	நேராக குண்டுகள் வீழ்ந்தன.
	ரயில்வே ஸ்டேஷன்.—டிரிடாவா (Diredawa).	1 விமானம்.	அதிகச் சேதம்.
	ஜெர்மன் பீரங்கிகள்.—கலேயிக் (Calais)கும் புலாயினுக் (Boulogne)கும் நடுவிலுள்ள கடற்கரை.	......	தீப்பிடித்தது. இங்கிலாந்திலிருந்து தெரிந்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
23—8—40. (வெள்ளிக்கிழமை).			
	பகலில்.—விமான நிலயங்கள்.—பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland), பிரான்ஸ் (France), ஜெர்மனி (Germany).		
	இரவில்.—ஒரு பெரிய ராணுவ முக்யத்வம் வாய்ந்த விமானநிலயம்.-பாரிஸு (Paris)க்கு அருகிஉள்ள வில்லா கோப்ளே (Villa Coublay).	......	நாசமாயிற்று.
	விமான நிலயங்கள்.—வானீஸ் (Vannes), ஸெயின்ட் ப்ருக் (Saint Briec), ரென்னிஸ் (Rennes), தினார்டு (Dinard), லான்வியாக் (Lanveoc), போல்மிக் (Poulmic), கைபாவாஸ் (Guipavas), லிஸ்யூ (Lisieux), கேயன் (Caen), ஸெயிண்ட் ஓமர் (St. Omer), மெர்வில் (Merville), ஆர்லியன்ஸ் (Orleans), கிளைஸி (Glisy), ப்யோவாய் (Beauvais).	......	தீப்பிடித்தது. பலத்த சேதம்.
	ஜெர்மன் பீரங்கிகள்.—ஹாரிங்ஷெல்ஸ் (Harigzelles).		
	எண்ணெய் சுத்தி செய்யுமிடம்.—ரூர் (Ruhr).	......	தீப்பிடித்தது.
	சாமான் கிடங்குகள்.-ரைன்லாண்டு (Rhine Land), புலாயின் (Boulogne), டீயப் (Dieppe), பிரஸ்ட் (Brest).	3 விமானங்கள்.	......
	விமானங்கள் இறங்குமிடம், மோட்டார் வண்டிகள்.—டெர்னு (Derna).	......	கட்டடங்களும், சைன்யங்கள் இருக்குமிடமும் சேதமாயின.
	விமான நிலயம்.—இதாலியின் சோமாலிலாண்டி (Somaliland)அள்ள மொகாடிஷு (Mogadishu).	சேதமில்லை.	3 விமானங்கள்.
	யுத்தக்கப்பல்கள்.—லிபியா (Libya)வில் உள்ள போம்பா (Bomba),	சேதமில்லை.	2 நீர் மூழ்கிக் கப்பல்கள், 1 நாசகாரி, 1 சாமான்கள் ஏற்றிச் செல்லும் கப்பல்.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
24—8—40. (சனிக்கிழமை).			
	ஜெர்மன் பீரங்கிகள்.—கலேக் (Calais)கும், புலாயினுக் (Boulogne)கும் நடுவில்.	......	நாசமாயின.
	டெயிம்லர்-பென்ஸ் (Daimler-Benz), ஆலை.—ஸ்டட்கார்ட் (Stuttgart).		
	நைட்ரஜன் (Nitrogen) ஆலை, எண்ணெய் ஆலை.—பிராங்பர்ட் (Frankfurt).		
	எண்ணெய்.—தினார்டு (Dinard), விமான நிலயம்.		தீப்பிடித்தது.
	விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium), ஜெர்மனி (Germany), ஹாலந்து (Holland).		
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பிராங்பர்ட் (Frankfurt), முதலிய அநேக தென்மேற்கு ஜெர்மனியிலிருக்கும் பட்டணங்கள், லட்விக்ஷாபன் (Ludwigshafen), ஸ்டட்கார்ட் (Stuttgart).	2 விமானங்கள்.	
	மிலான் (Milan), ஸெஸ்டோகாலண்டையில் டார்ஜட்டுகள்.	நஷ்டமில்லை.	......
25—8—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	பெர்லின் (Berlin).		
	வெடி மருந்துகள் ஆலை, விமானஞ்சுடும் பீரங்கிகள், பெரிய மின்சார விளக்குகள்.—பெர்லின் (Berlin).		பெரிய தீ பரவியது
	விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland), பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium), வடமேற்கு ஜெர்மனி (Germany).	......	நாசமாயின.
	சாமான் கிடங்குகள்.—கொலோன் (Cologne), ஹாம் (Hamm), ஷ்வர்ட் (Schwerte).		
	கப்பல் நிற்குமிடம்.—ப்ரமன் (Bremen).	......	தீப்பிடித்தது.
	எண்ணெய்க் கிடங்குகள்.—செர்பரோ (Cherbourg).		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டம்.
25—8—40 (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	கடல் விமானங்கள், ஈ படகுகள்.—புலாயின் (Boulogne) துறைமுகம்.		அநேக விமானங்கள் சேதமடைந்தன.
	விரோதி விமானங்கள்.—நார்வே (Norway)-யிலுள்ள ட்ராம்ஸோ (Tromso) பிரதேசம்.	5 விமானங்கள்.	
26—8—40. (திங்கட்கிழமை).			
	இதாலியன் ஸோமாலிலாண்டி (Somaliland)லுள்ள மொகாடிஸியோ (Mogadiscio).	......	தீப்பிடித்தது. ஒரு கட்டடம் இடிந்தது.
	விமான நிலயங்கள்.—டெஸ்ஸி (Dessie), பார்டியா (Bardia), எல் ஆடம் (El Adem).		
	ராணுவக் கட்டடங்கள்.—கலாபட் (Galabat), மோதிமா (Motema), பெர்லின் (Berlin).	நஷ்டமில்லை.	
27—8—40. (செவ்வாய்க்கிழமை).			
	விமான நிலயத்தில் கட்டடங்கள்.—டெஸ்ஸி (Dessie).	நஷ்டமில்லை.	தீப்பிடித்தது.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
20—8—40. (செவ்வாய்க்கிழமை).			
	காலையில்.—எஸ்ஸக்ஸி (Essex)-ல் ஒரு பட்டணமும், தெற்கு வேல்ஸ் (Wales)-ல் ஒரு பட்டணமும்.	......	சில வீடுகள் இடிந்தன. சிலருக்குக் காயம். சிலர் மாண்டனர்.
	பிற்பகலில்.—கிழக்கு ஆங்கிலியன் (Anglian), பட்டணம்.	......	ஒருவருக்கும் காயமில்லை.
	விமான நிலயம்.—இங்கிலாந்தின் தெற்குக் கடற்கரை.	......	சேதமில்லை.
	மாலையில்.—தென்கிழக்கு இங்கிலாந்தில் ஒரு பட்டணம்.		கட்டடங்களுக்கு சொல்ப சேதம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
20—8—40.	(செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
	இரவில்.—விமான நடவடிக்கை அதிகமாயில்லை.	5 விமானங்கள்.	1 விமானம்.
	மால்டா (Malta).	......	இதாலிய விமானங்கள் துரத்தப்பட்டன.
21—8—40.	(புதன்கிழமை).		
	பகலில்.—யார்க்ஷயரி (Yorshire)-ல் ஒரு பட்டணம். மிட்லாண்ட்ஸி (Midlands)-ன் வடகிழக்கு, தென்கிழக்குப் பாகங்கள், தென்கிழக்குக் கரையில் விமான நிலயங்கள்.	...... 13 விமானங்கள்.	சிலருக்குக் காயம் சில வீடுகள் நாசமாயின. 2 விமானங்கள்; ஒரு விமானி பத்திரம்.
	இரவில்.—தென்கிழக்கு இங்கிலாந்தில் இரண்டு இடங்கள்; தென்கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland).		ஒருவருக்குக்காயம்.
	ஜிப்ரால்டர் (Gibralter).		சேதமில்லை.
22—8—40.	(வியாழக்கிழமை).		
	பகலில்.—இங்கிலீஷ் கால்வாயில் ஒரு துணைக்காவல் பிரிடிஷ் கடற்படை, இங்கிலீஷ் கடற்கரை.	......	சேதமில்லை. சொல்ப நஷ்டம்.
	இரவில்.—தென்மேற்கு இங்கிலாந்தில் மூன்று பட்டணங்கள்.	10 விமானங்கள்.	4 விமானங்கள் 2 விமானிகள் உயிர் தப்பினர்.
23—8—40.	(வெள்ளிக்கிழமை).		
	பகலில்.—மிட்லண்ட்ஸ் (Midlands), ஒரு கிழக்குப் பிரதேசம், வடகிழக்குக் கடற்கரையில் ஒரு பட்டணம்.	4 விமானங்கள்.	முக்கியமான சேதமில்லை. 2 விமானங்கள்.
	இரவில்.—மிட்லண்ட்ஸ் (Midlands), வேல்ஸ் (Wales), இங்கிலாந்தின் தென்கிழக்கு, தென்மேற்குக் கடற்கரைகள் வைட் (Wight) தீவு.	......	சொற்ப சேதம்.
	அலெக்ஸாண்டிரியா (Alexandria).		ஒருவருக்கும் காயமில்லை.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
24—8—40. (சனிக்கிழமை)			
	காலையில் :— இங்கிலாந்தின் தெற்கு, தென்கிழக்குப் பாகங்கள், கிழக்கு ஆங்கிலியாவி (Anglia)ல் ஒரு பட்டணம்.	......	ஒரு வீடு இடிந்தது. ஒருவருக்கும் காயம் இல்லை.
	பிற்பகலில்:—லண்டன் (London), ராம்ஸ்கேட் (Ramsgate).	......	சில வீடுகளிலும், ஒரு மாதாக்கோவிலிலும் குண்டுகள் விழுந்தன.
	ஒரு விமான நிலயம் தேனட் (Thanet) தீவிலுள்ள மான்ஸ்டன் (Manston), மிட்லண்ட்ஸ்(Midlands), போர்ட்ஸ்மத் (Portsmouth), வேல்ஸ் (Wales).	...... 50 விமானங்கள்.	சிலர் இறந்தனர். 19 விமானங்கள். 12 விமானிகள் பத்திரம்.
25—8—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	காலையில் :—தென்கிழக்கு இங்கிலாந்து, மிட்லண்ட்ஸ் (Midlands), ஒரு வெல்ஷ் (Welsh) கடற்கரைப் பட்டணம்.		சேதமில்லை.
	பிற்பகலில் :—டார்செட் (Dorset) கடற்கரை, தென்வேல்ஸ் (Wales), ஸில்லி (Scilly)த்தீவு.	......	சேதமில்லை, ஒருவனுக்குக்காயம். ஒருவன் இறந்தான்.
	இரவில் :—லண்டன் (London), வடகிழக்கு இங்கிலாந்தில் ஒரு முக்கியமான பிரதேசம், மிட்லண்ட்ஸ் (Midlands), ஸ்காத்லாந்து (Scotland), மால்டா (Malta).	55 விமானங்கள். 2 விமானங்கள்.	13 விமானங்கள் 3 விமானிகள் பத்திரம்.
26—8—40 (திங்கட்கிழமை).			
	பகலில் தேம்ஸ் நதி முகத்துவாரம் (Thames Estuary), ஒரு தென்கிழக்குப் பட்டணம். எஸ்ஸெக்ஸ் (Essex), போக்ஸ்டோன் (Folkstone).	......	மனிதர்களுக்கும், வீடுகளுக்கும் சொல்ப சேதம். சில நிலங்களில் தீப்பிடித்தது. ஆனால் உடனே அணைக்கப்பட்டது சிலர் மாண்டனர்,

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	அவற்றின் விளைவுகள்.
26—8—40. (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.			
	ஆகாயக்கோட்டை (balloons) டோவர் (Dover), ஸில்லி (Scilly) த்தீவு, போர்ட்ஸ்மத் (Portsmouth).	......	சேதமில்லை.
	இரவில்:—சண்டை ஆரம்பித்ததிலிருந்து இதுதான் பெரிய விமானப்படையெடுப்பு. லண்டன் (London).	......	முக்யமான சேதம் ஒன்றும் இல்லை.
	இன்று படையெடுப்பு வடகிழக்கு இங்கிலாந்திலிருந்து தென்மேற்கு இங்கிலாந்து வரையில் சுமார் 500 மைல்கள் பரவியிருந்தது.	47 விமானங்கள்.	15 விமானங்கள். 11 விமானிகள் உயிர் தப்பினர்.
	அலக்ஸாண்டிரியா (Alexandria).	......	ஒருவன் இறந்தான். ஐவருக்குக் காயம்.

அனுபந்தம் I.

ரூபாய் நாணயங்களைச் சேர்த்துவைப்பதின் தீமைகள்.

(ஸர் புருஷோத்தமதாஸ் தகூர்தாஸ் ஒலிபரப்பியது.)

சமீபத்தில் ஏற்பட்ட வதந்திகளிலிருந்து இந்தியாவில் பல பாகங்களில் ரூபாய் நாணயங்களை ஒளித்துவைப்பதால், பொதுஜன அசௌகரியம் ஏற்பட்டு விட்டது. செலாவணிக்காக நோட்டுகளும், வெள்ளிப்பணமும் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டரை லக்ஷக்கோடி நோட்டுகளும், இரண்டிலிருந்து இரண்டரை லக்ஷக்கோடி ரூபாய் நாணயமும் வழங்கிவருகின்றன. ரூபாய் கணக்கு சரியாய்க் கொடுக்கமுடியவில்லை.

சேர்த்துவைப்பதாலுண்டான கஷ்டத்தை நிவர்த்திக்க ஒருரூபாய் நோட்டுகள் சமீபத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. இதன் கணக்கும் தெரியவில்லை.

கடிதக்காசுக்கும், வெள்ளிக்காசுக்கும் வித்தியாசம் கிடையாது. ரூபாயின் மதிப்பு அதிலிருக்கும் வெள்ளியைப் பொருத்ததில்லை. செலாவணி மதிப்பு அதன்மேல் போட்டிருக்கும் முத்திரையைப் பொருத்ததேஒழிய அதிலிருக்கும் வெள்ளி விலையைப் பொருத்ததில்லை. இந்தியாவல்லது இதர தேசங்களில் நம்முடைய ரூபாய் நாணயத்தை விற்ருல் முத்திரை மதிப்புப்படி விலை கிடைக்காது. அதிலிருக்கும் வெள்ளிக்குத்தான் விலை கொடுப்பார்கள்: அதாவது ஒரு ரூபாய் நாணயத்தைக் கால் ரூபாய்க்குத்தான் விற்கலாம்.

இதை யோசித்தால், ரூபாய் நாணயத்துக்கும், நோட்டுக்கும் வித்தியாஸமில்லாதது புலப்படும். வெள்ளியைச்சேர்க்க எண்ணம் கொண்டால் ரூபாய்களைச் சேர்த்துப்பலனில்லை. அதற்குக்கட்டிவெள்ளி வாங்கவேண்டும். ஆனல் கட்டி வெள்ளியை வாங்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

நுபாய்கள் குறைவதற்குக் காரணமென்ன?—ரூபாய் நாணயத்துக்கும் நோட்டுக்கும் வித்தியாஸமில்லாதிருந்தால் பொதுவாக நோட்டைவிட ரூபாய் அதிகமாக வழங்கக் காரணமென்ன? இதுவரையில் அடித்த நோட்டுகள் குறைந்தபக்ஷம் 5-ரூபாய் நோட்டுகள்தான். ஒருரூபாய் நாணயம் அதில் ஐந்தில் ஒரு பங்காதலால் அடிக்கடி வழங்குவதற்கு நோட்டைவிட ரூபாய் நாணயம் சுலபமாயிருக்கிறது. மேலும், குடிசைகளில் வசிக்கும் கிராமத்தார்கள் நோட்டுக்களை அழுக்காக்காமல், பழுதாக்காமல் வைத்துக்கொள்ள முடியவில்லை. ஆகையால் ரூபாய் நாணயம் வேண்டுமென்கிருர்கள். நோட்டுகள் கிழிந்து போவதாக ஏழைகளிடமிருந்து புகார்வந்து சிலவருஷங்களுக்குமுன் அச்சடித்த ஒருரூபாய் நோட்டுகள் வாபஸ் வாங்கப்பட்டன. இந்தக் காரணங்களால்தான் ரூபாய் நாணயம் அதிகமாய் உபயோகத்திலிருக்கிறது.

சென்ற யுத்தம் முடிந்தபிறகு, ஒருசமயம் இதே கிராமத்தார்களிடம் சில சரக்குகளை வாங்கி அதன்விலை ரூபாய் இருநூறு நாணயங்களாகக்கொடுத்தபோது, அவ்வளவு பாரத்தைத் தூக்கிச்செல்ல முடியாதென்று பணத்துக்குப் பதிலாக நோட்டுகள் கேட்டார்கள். ஆகையால் தினசரிக்காரியங்களுக்கு ரூபாயும், அதிகப்பணம் சேர்த்துவைக்க நோட்டுகளும் கோருகிறார்கள்

நடப்பு யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து ரூபாய் நாணயம் குறைந்துவருகிறது. வியாபாரிகள் நாணயத்தைச்சேர்த்து ஒளித்துவிடுகிறார்கள். இதனால் ஏழைகள் தினசரி உபயோகத்துக்குப் பணமில்லை.

ரூபாயைச்சேர்ப்பதால் எதிர்பார்க்கும் லாபமென்ன?—இப்பொழுது நடைபெறும் இந்திய கவர்ன்மெண்டிருக்கும் வரையில்தான் நோட்டுக்கு மதிப்பென்றும், கவர்ன்மெண்டு மாறினால் புது கவர்ன்மெண்டு இதை எடுத்துக்கொள்ளாதென்றும் பயந்து நோட்டைப் பணமாக மாற்றிவிடுகிறார்கள். பணமாயிருந்தால் பயமில்லையென்று நினைக்கிறார்கள். கடவுள் கிருபையால் நம்முடைய கவர்ன்மெண்டு மாறாது. மாறுவதாக வைத்துக்கொண்டாலும், ரூபாயாக வைத்துக்கொள்ளுவதில் ஒரு பிரயோசனமுமில்லை. ஏனென்றால், ஏற்கனவே எடுத்துக்காட்டியபடி ஒரு ரூபாய் நாணயத்தில் கால் ரூபாய் வெள்ளிதானிருக்கிறது. நாலில் ஒருபங்கு கிடைத்தால் போதுமா? இந்திய வியாபாரிகள், பொதுவாய், கூர்மையான புத்தியுள்ளவர்களாயிருந்தும் இந்தக் காரியத்தில் யோசனை செய்யாமல் போய் விட்டார்கள். இந்தப் புத்தி ஹீனத்தால்தான் ரூபாய் பஞ்சமேற்பட்டது.

இது கண்மூடித்தனமான காரியமாகும்: ஆனால் இதனால் கவர்ன்மெண்டுக்கு ஒரு சங்கடமும் வராது. ரிஸர்வ் பாங்கியில் 30-கோடி ரூபாய் நாணயங்கள் தயாராயிருக்கின்றன. புது ரூபாய் அடிக்க வேண்டிய வெள்ளியுமிருக்கிறது: ஆனால் வெள்ளியின் கணக்கு வெளிப்படுத்தமுடியாது. வேண்டுமானால் கவர்ன்மெண்டு, புது நோட்டுகளை அச்சடித்துக்கொள்ளலாம். பத்திரிகைகளும், மற்றவர்களும் கேட்டுக்கொண்டதிலிருந்து இப்பொழுது ஒருரூபாய் நோட்டு அடிக்கப் பட்டிருக்கிறது.

ரூபாய்களைச் சேர்ப்பது ஏழைகளுக்குக் கஷ்டம்.—மிகவும் ஏழைகளாயுமில்லாமல், செல்வந்தர்களாயுமில்லாமல் சிறிதுபணமுள்ள மத்திய ஜனங்களும், தொழிலாளிகளும் ரூபாய் நாணயத்தை அதிகமாக உபயோகப்படுத்துவதால், இந்தக் கஷ்டம் அவர்கள் தலையில் விடிகிறது. சில வாரங்களாக, நோட்டுக்குப் பதிலாக ரூபாய்களைக்கொடுத்து மாற்றி லாபம் (டிஸ்கவுண்டு) அடிப்பதாகத் தெரிகிறது. இது வெகு கேவலம். ஒரு ஸர்க்காரும் ஏழைகள் பணத்தை இவ்விதம் அபகரிக்க இடம் கொடுக்கமாட்டார்கள்.

இந்தியத் தற்காப்புச்சட்டத்தின்படி, நோட்டை வாங்க மறுப்பவர்களுக்கும், நோட்டை ரூபாயாக மாற்ற லாபம் கேட்கிறவர்களுக்கும் அபராதம் விதிக்கப்படும்.

ஒரு தேசத்தின் பொருளாதார க்ஷேமத்துக்கு, பணம் சரிவர செலாவணியாக வேண்டும். பொய்வதந்திகளைக் கட்டிவிட்டுச் செலாவணியைக் கெடுத்தால் சர்வ ஏழைகளைக் கெடுத்ததாகும்.

ரிஸர்வ் பாங்கிலிருந்து வெளியனுப்பும் நோட்டுகள் கணக்கைச் சற்று கவனிப்போம். $2\frac{1}{2}$-லக்ஷக்கோடி நோட்டுகள் கொடுக்கப்படுகின்றன. இதற்கு பதிலாக, தோலா ஒன்றுக்கு ரூ 21 மதிப்போடு, 45-கோடி பெறுமான தங்கம் கைவசமிருக்கிறது. கடை விலைப்படி இந்தத் தங்கம் 90-கோடி ரூபாய் பெறும். வெள்ளி முதலிய ஜாமீன்களைத்தவிர, தங்கம் மட்டும், நடப்பு விலைப்படி நோட்டுகளுடைய விலையில் 100-க்கு 33-பாகம் ஈடுசெய்யக் கையிலிருக்கிறது.

இதில் $4\frac{1}{2}$-கோடி ரூபாய் பெறுமானமுள்ள தங்கம் ஜூன்மாத ஆரம்பத்தில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு மாற்றப்பட்டு, இப்பொழுது ரிஸர்வ் பாங்கியிலிருக்கிறது. வேண்டிய அளவு தங்கம் கைவசமிருப்பது திருப்திகரமானது. இதை மத்திய சபை (Central Assembly)அனுமதியின்றி எடுக்கமுடியாது. ஆகவே நம்முடைய செலாவணியானது நல்ல ஸ்திதியிலிருக்கிறது.

புத்தியுள்ள எவனும் ரூபாயைச்சேர்க்க எண்ணக்கூடாது. இது அனாவசியமென்பதோடு, ஏழைகளுக்கும் கஷ்டத்தை உண்டாக்குகிறது. இந்தக் கண்மூடித்தனத்தைத் தடுக்கவேண்டும். ஏற்கனவே, வேறுவிதக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்குமிந்தச் சமயத்தில், இந்தக் கஷ்டமும் சேரக்கூடாது.

நியாயமாகக் கேட்கும் பணத்தையெல்லாம் கொடுக்க ரிஸர்வ் பாங்கி தயாராயிருப்பதைப்பற்றி அடிக்கடி அதன் நிர்வாகிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

கிராமங்களில் பணத்தைச் சேர்த்துவைத்துத் திருடர்கள் கொண்டுபோன கதைகள் காதில் பட்டிருக்கின்றன. அவர்களுக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான். ஆனால் நான் முக்கியமாகச்சொல்லும் காரணம் ஏழைகள் பணமில்லாது படும் கஷ்டம்தான்.

இவ்விதமாகப் பணத்தைச் சேர்த்துவைப்பது நம்முடைய தேசத்துக்கும், தேசத்தார்களுக்கும் அதிகத் தீங்கை விளைவிக்குமென்று, ஹரிஜன் பத்திரிகையில் மஹாத்மா காந்தி வரைந்திருக்கிறார்.

அனுபந்தம் II.

யுத்த முக்கியச் செய்திகள்.

அனுகூல சின்னங்கள்.

எதிர்ப்பு. 'தற்காப்பு' என்ற வார்த்தை போய், 'எதிர்ப்பு' என்ற வார்த்தை மிஸ்டர் சர்ச்சில், மிஸ்டர் மாரிஸன், முதலிய தலைவர்களின் பேச்சுகளில் கேட்பது, உத்ஸாகத்தையும் தைர்யத்தையும் கொடுக்கிறது. கேவலம், ஒரு ஆசையாகமட்டுமில்லாமல், சமீபத்தில் நடக்கக்கூடிய நோக்கமாகவும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. சில நாட்களாக, ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்ரமித்த நாடுகளிலும் பிரிடன் கடுமையாயும், வெற்றிகரமாயும் செய்யும் விமானப் போரே இதற்கு சுப சின்னங்களாகும்.

மிலான், டியூரின் உள்பட இதாலியிலும் வட ஆப்பிரிக்காவிலும் விமான எதிர்ப்பு இடைவிடாது, வெற்றிகரமாய் நடக்கிறது.

முஸோலினியின் கப்பல் படையில் இரண்டு நாசகாரிகளும், இரண்டு நீர்மூழ்கிகளும் சேதமாக்கப்பட்டன.

கெர்ன்ஸி (Guernsey)-க்கு ஜெர்மானியர் கொண்டுவரும் முக்கிய தளவாடங்களை இங்கிலீஷ் விமானங்கள் கண்டவுடன் தகர்த்துவிடுகின்றன.

பிரிடிஷ் கால்வாய்க்கப்புறமிருந்து ஜெர்மன் பீரங்கிகள் சுட்டால், இக்கரையிலிருந்து பிரிடிஷ் பீரங்கிகள் அக்கரையைச் சுடுகின்றன.

" நடுக்கீழ் நாட்டு (Middle East) நிலைமை திருப்திகரமாயிருப்பதாயும், இனி இங்கு சண்டை அதிகரிக்குமென்றும், நடுக்கீழ்நாட்டு யுத்தத்திலிருந்தே முடிவில் வெற்றிவரப் போகிறதாயும்" ஜெனரல் வேவல் (General Wavell) அபிப்பிராயப் படுகிறார். அவர் 21--8—40ல் சொல்லிய அபிப்பிராயமிதுவே.

ஜெர்மானியருடைய 'மின்னல் எதிர்ப்பு'க்கெல்லாம் பிரிடிஷ் மக்கள் பயப்படவில்லை. அவர்களை எதிர்த்துத் தொலைப்பதற்காகவே மேலும் மேலும் வெடிகுண்டு விமானங்களும், சண்டை ('பைடர்') விமானங்களும் கட்டியனுப்பக் கோருகிறார்கள்.

புது நேயமும் கிடைக்கும்போலிருக்கிறது. சாம்ராஜ்யம் தனக்கென்று இருப்பதாக இதாலி மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறது. சாம்ராஜ்யம் நிலைக்க இஜிப்தை அபகரிக்க வேண்டும்; எத்தனித்தால் இஜிப்து நம்மோடு சேர்ந்து இதாலியை எதிர்க்கும். (22—8—40ல் இஜிப்து ராணுவ மந்திரி சொன்னது).

தூரக்கீழ் நாடு. ஷாங்கே(Shanghai)யிலுள்ள பிரிடிஷ் துருப்புகள் வெளிப்படுத்தப்பட்டு விட்டன. இதாலியர்களும் தங்கள் துருப்புகளை வெளியேற்றப் போவதாக ஜப்பான் பத்திரிகைகள் சொல்லுகின்றன. இப்படி இருதேச துருப்புகளும் வெளியேறினால் ஒன்றுக்கொன்று சரியாய்ப் போகும்.

இந்த சந்தர்ப்பத்தில், அமெரிக்கா தன் துருப்புகளை அனுப்பி, பிரிடனுக்கு பதிலாக ஷாங்கேயைப் பாதுகாப்பதுதான் அமெரிக்காவுக்கு கண்யத்தைத் தரும் என்று 'அமெரிக்க ஹெரால்ட்' பத்திரிகை சொல்லுகிறது.

பிரிடனோடு சண்டை செய்ய ஜப்பானுக்கு எண்ணமுண்டா?

எண்ணமிருந்தால், பின் குறிப்பிட்டிருக்கும் கஷ்டங்கள் ஜப்பான் அனுபவிக்க வேண்டும் :—

(1) அக்கரையிலுள்ள சைனாவோடு 3-வருஷங்களாகச் சண்டை செய்து பொருளாதாரக் குறைவு பலமாய் ஜப்பானுக்கு ஏற்பட்டு இருக்கிறது.

(2) ஜப்பானுடைய நில, ஆகாயப் படைகளில் மூன்றில் இரண்டு பங்கு சைனா யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன.

(3) ஜப்பான் சண்டை செய்தால் அமெரிக்கா யுத்தத்துக்கு வரலாம். இது எப்படியிருந்தாலும், ஜப்பானுக்கு வேண்டிய யுத்த தளவாடங்கள் வெகுவாய் அமெரிக்காவிலிருந்து இப்பொழுது கிடைக்கின்றன. இவைகள் நின்று விடும்.

(4) ஜப்பானுக்கு கடற்படை பெரிதானலும், அமெரிக்கன் கடற்படையும் பிரிடிஷ் தூரக் கீழ்நாட்டுக் கடற்படையும் சேர்ந்த படைக்கு ஈடாகாது.

(5) 2,000 மைலுக்கு அப்பாலிருந்தபடியே ஜப்பான் முற்றுகை போடப் படும்; இறக்குமதி தடைபடும்; ஏற்றுமதிக் கப்பல்கள் சரக்கேற்றித் தயாராக லாமே ஒழிய வெளிக்கிளம்ப முடியாது.

ஜெர்மன் படையெடுப்பு.—ஜெர்மானியர் படையெடுப்பார்களென்று எதிர் பார்க்கிறோம்; படையெடுத்துத்தாளுகவேண்டும். ஹிட்லர் கால அட்டவணை எல்லாம் தள்ளிப்போய்விட்டது; எதிர்பார்த்தபடி காரியங்கள் நிறைவேருததால் ஜெர்மானியர் அமைதி கெட்டு நிற்கிருர்கள். மாரிகாலம் வந்துவிடுமே, பஞ்சத்துக்கு என்ன செய்வதென்று பயப்படுகிருர்கள். இதற்காகவே ஹிட்லர் படை எடுத்தாக வேண்டும்.

இவ்விதம் கஷ்டப்படும் தன் ஜனங்களுக்கு ஹிட்லர் பிரிடனை எதிர்க்க ஆரம்பித்துவிட்டதாக முதலில் சொன்னர். பிறகு ஜெயிக்கவில்லையே என்ற மனத்தாங்கல் வராமலிருக்க அதை மறுத்து சற்று ஒத்திப்போட்டிருப்பதாகச் சொல்லுகிருர். இதற்குக் காரணங்கள் :—

1. முதல் அணி விமானங்கள் 700-க்கு மேலும், விமானிகள் 2,000 விருந்து 3000 வரையும் நஷ்டம்.

2. பிரிடிஷ் விமானங்கள் நாளுக்கு நாள் அதிகப்படுகின்றன. பிரிடிஷ் விமானிகள் மனக்கலக்கமில்லாமல் தைர்யமாய் எதிர்க்கிருர்கள்.

3. ஹிட்லருக்கு ஆப்தரான ரிப்பன்ட்ராப் (Ribbentrop) பார்த்துப் போன இங்கிலாந்தெல்லாம் இப்பொழுது மாறிப்போய்விட்டது. எல்லா இடங் களிலும் பாதுகாப்பு பலமாய் ஏற்பட்டுவிட்டது. ரிப்பன்ட்ராப்புக்கே இது ஆச்சரியத்தைக்கொடுக்கும்.

4. 'பிரிடனை முழு முற்றுகை போடப்போகிறேன்' என்று ஹிட்லர் சொன்ன வார்த்தைகளை, பிரிடனும், நடுநிலைமை நாடுகளும் வெட்டிப்பேச்சென்று தள்ளிவிட்டன.

இதே மாதிரி 'கீசும் வெடிகுண்டுகள்' 'மொலொடாவ் ப்ரெட்பாஸ்கட்' வெடிகுண்டுகளும் வீண் ஜம்பந்தான். இவைகளை வீசுவதால் ஜயம் வந்துவிடாது. இவைகளெல்லாம் ஒலிபரப்பு சமாசாரங்களாகுமே ஒழிய காரியத்துக்கு உதவாது.

அனுபந்தம் III.

ஜெர்மன் பொய்கள்.

6—8—40.

1. *"எங்கள் ராஜ்யத்துக்கு வேண்டியவைகளை அஹிம்ஸா முறையில் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே எங்களுடைய (ஜெர்மானியருடைய) தேசீய-சமூக சமத்துவக்கக்ஷியின் கொள்கையாகும்: ஆகவே மஹாத்மா காந்தியின் அஹிம்ஸா தத்துவத்தை நாங்கள் மதிக்கிறோம்."*

குறிப்பு:—(1) "இளம்பிராயத்திலிருந்து எனக்கு சமாதானக் கொள்கையில் நம்பிக்கையில்லை. அதை எனக்குப் போதிக்கச்செய்த முயற்சி எல்லாம் வீணாயிற்று." (ஹிட்லர்: மைன்காம்பு).

"சுடத்தான் வேண்டும்: குறிதப்பினாலும் சுடத்தான் வேண்டும்." (கோரிங்—ப்ரான்க்பர்டர் ஸீடங்—11—3—33).

"படிப்பு—நாகரீகம்" என்ற வார்த்தைகளைக் கேட்டவுடன் சுட்டு விடுவோமாவென்று தோன்றி துப்பாக்கிக்குக் கை போகிறது." (ஜெர்மன் பாவலர் சங்க அக்கிராசனர்—ஜான் ஜாஸ்ட்).

(2) "ஹிட்லர் தத்துவம் என்னவென்று நமக்குத் தெரியும். இது இரக்கமில்லாத, ஒளிவுமறைவில்லாத, ஆயுதப்பிரயோகம். இதையொரு பிழையில்லா சாஸ்திரமாகச் செய்து, அணுப் பிசகாமல் அப்யசிக்கப்படுகிறது" (மஹாத்மா காந்தி: ஹரிஜன்—22—6—40).

(3) ஒரு சமயம் நோயால் வருந்திய அசுரன் ஒருவன் தேவனாய்ப் போக எண்ணங்கொண்டு நோய் தீர்ந்தவுடன், தேவனாகவே மாறிவிட்ட கதையைப்போல், கஷ்டம் வந்த காலத்தில் அஹிம்ஸையை வேண்டி ஹிட்லரும் மஹாத்மாவாக ஆய் விடுவார் போலும்!

2. *"ராஜ்ய தந்திரிகளின் பிரசாரத்தை ஆதரித்துப்பேசும் பிரிடிஷ் பாதிரிகள், பிரான்ஸுக்கு வந்த கஷ்டங்கள் பிரிடனுக்கும் வருமென்றும், அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும் உபதேசம் செய்கிறார்கள். பிரான்ஸில், கோடிக்கணக்கான ஜனங்கள் வீடுவாசலில்லாமல், ஆகாரமில்லாமல், திகைத்து அலைகிறார்கள்."*

குறிப்பு:—சென்ற வாரம் ஜெர்மனி செய்த பிரசாரம் வேறு விதம். அதாவது "பிளாண்டர்ஸிலும், பிரான்ஸ் வடபாகத்திலும் கோடிக் கணக்கான ஜனங்கள் நிர்க்கதியாயிருப்பதைத் தெரிந்துகொண்டு ஹிட்லர் அவர்களுக்கு வேண்டிய உதவியை "க்ஷேம

சங்கத்தை "க்கொண்டு செய்யச் சொன்னார். இவர்கள் பட்டினியால் வருந்துவது இவர்கள் முகத்தில் தெரிந்தது. நேற்று வரையில் எதிரியாயிருந்த ஜெர்மானியர் தங்களுக்கு உதவுவார்களென்று அவர்கள் நினைக்கவில்லை. பல தினங்களாக பட்டினி கிடந்த இவர்களுக்கு வயிறார சாப்பாடு கிடைக்க ஆனந்தம் மேலிட்டது. ஓடிப்போனவர்கள் தங்கள் தங்கள் ஊருக்குத் திரும்பி வந்து ஊர்களைப் புனருத்தாரணம் செய்கிறார்கள். வழக்கம்போல் தங்கள் வேலையைப் பார்க்கிறார்கள். க்ஷேம சங்கங்கள் செய்யும் உதவிக்குக் கணக்கில்லை."

3. "*ஜெர்மனியை யுத்தத்துக்கிழுத்தது யார்? என்று கேட்கிறோம். பிரிடனல்லவா?*"

குறிப்பு:—ஆஸ்திரியா, ஸெகோஸ்லவேகியாவைச் சேர்த்துக்கொண்டது யார்? போலண்டை எதிர்த்தது யார்? நார்வே, டென்மார்க்கு ஹாலந்து, லக்ஸம்பர்க், பெல்ஜியத்தைப் படையெடுத்தது யார் என்று நாம் பதில் கேள்வி கேட்கவேண்டாமா? ஆனால் கேட்கலாமா? அக்கிரமக்காரர்கள் யாரென்று தெரியும்.

4. "*பிரிடிஷ், பிரெஞ்சு ராஜீயத்தலைவர்களுக்கு யுத்தத்தில் ஆசை; சண்டையைக் கிளப்பி விடுவதே இவர்கள் தொழில்; ஆகையால் இந்த யுத்தத்தையும் கிளப்பி விட்டார்கள்.*"

குறிப்பு:—"பிரிடனுக்கு யுத்த தளவாடங்கள் போதாது; யுத்த தயாரிப்புகளும் சரிவர செய்தாகவில்லை; இதற்குக் காரணம் பிரிடிஷ் கவர்ன்மெண்டென்று எல்லோரும் குற்றம் சாட்டுகிறார்கள்." (மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் பேச்சிலிருந்து எடுத்து அதே தேதியில் அதாவது 6—8—40-ல் ஜெர்மனி ஒலி பரப்பியது).

5. "*அமெரிக்கத் துருப்புகளை ஐரோப்பாவுக்கு அனுப்புவது புத்திஹீனம் என்று ஜென்ரல் பெர்ஷிங் ஒலிபரப்பியிருக்கிறார்.*"

குறிப்பு:—அமெரிக்கா சேராமல் சண்டையை நிறுத்தும் காலம் போய்விட்டதென்று, இதே பேர்ஷிங் ஆகஸ்ட் 5-ல் ஒலி பரப்பில் சொல்லி இருக்கிறார். 50-நாசகாரிகளாவது பிரிடனுக்குக் கொடுத்து உதவவேண்டுமென்றும், இதைச் செய்யாவிட்டால் அமெரிக்காவுக்கே ஆபத்து வந்துவிடுமென்றும் சொல்லியிருக்கிறார்.

6. "*சுதேசத்தை விட்டு, அன்னிய நாட்டுக்குப்போய் டிகால் கக்ஷியைச் சேர்ந்து ஜெர்மனியை எதிர்க்கப் பார்க்கும் பிரெஞ்சுக்காரர்கள் 4 அல்லது 5 பேர்களுக்குமேலில்லை.*"

குறிப்பு :—ஜெனரல் டீ காால் அமைத்திருக்கும் சுயேச்சை பிரேஞ்சுப்படையில் பிரேஞ்சுக்காரர்கள் இடைவிடாது சேர்ந்துகொண்டே இருக்கிறார்கள். விமானிகளாகப்போய், ஜெர்மனியைத் தகர்க்கிறார்கள் ; பிரேஞ்சு பிரிடிஷ் கொடிகளைக் கட்டிக்கொண்டு, சண்டை, வியாபாரக் கப்பல்களை ஒட்டுகிறார்கள். இதற்கு எல்லாம் 5-பேர்கள் போதுமா ?

5-பேர்களானால், 'இந்தக் கப்பல்களையும், விமானங்களையும் உடைத்து விடுவோம்' என்று ஆகஸ்ட் 10-ல் ஜெர்மனி சொல்லக் காரணமென்ன ? பிதேன் அரசாங்கம் ஜுலை 30-ல் டி காலோடு சேருகிறவர்களுக்கு மரண தண்டனையென்று விசேஷ சட்டம் பிறப்பிப்பானேன் ?

7—8—40.

7. *"ஜெர்மன் விமானங்கள் போட்ட ஹிட்லர் பிரஸங்கத்தை ஆசையோடு பிரிடிஷ் மக்கள் வாசிப்பதாயும், பிரிடிஷ் கவர்ன்மெண்டு பத்திரங்களை இரண்டு பென்ஸ் வீதம் விற்கச்சொன்னதாயும், ஒரு பவுன் கொடுத்து சிலர் வாங்கியதாயும், நம்பக்கூடிய செய்தி வந்திருக்கிறது."*

குறிப்பு :— அதாவது பிரிடிஷ் கவர்ன்மேண்டே, இரண்டு பென்ஸ் வீதம் விற்கச் சம்மதித்ததாயும், ஆனால் சிலர் ஒரு பவுன் வரையில் கொடுத்து வாங்கியதாயும், இந்த ஒலி பரப்பின் அபிப்பிராயம். பிரிடிஷ் கவர்ன்மேண்டு இந்தப் பத்திரங்களை வாசிக்கக்கூடாதென்றும் சொல்லவில்லை; விற்கவுமில்லை. ஆனால் ஆகஸ்ட் 6-ல் ஹிந்துஸ்தானியில், பிரிடிஷ் போலீஸ்காரர்கள் வீடுகளைச் சோதனை போட்டு, அகப்பட்ட பத்திரங்களைக் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொன்னதற்கும், இதற்கும் ஒற்றுமையில்லை. ஒரு பிரிட்டிஷ் மாது சாமர்த்தியமாய் இந்தப் பத்திரங்களைப் பொறுக்கி மூட்டை கட்டி இரண்டோரு பவுனுக்கு விற்று, செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உதவி செய்தாள். இதிலிருந்து பத்திரமொன்றுக்கு ஒரு பவுன் கொடுத்து வாங்கியதாகப் பொய்க்கதை கட்டி விட்டார்கள்.

8. *ஸர் கிங்ஸ்லி வுட்* (Sir Kingsley Wood) *சமர்ப்பித்த வரவு செலவு திட்டம் ஒருவருக்கும் பிடிக்கவில்லை. வரும்படி வரி (இன்கம்டாக்ஸ்), வாரச் சம்பளத்தில் கட்டாயப் பிடிப்பு முதலியவைகள் வரும்படியை அதிகரித்தாலும், ஜனங்களுடைய சந்தோஷத்தைக்கெடுத்து, சண்டையைச் சரிவர நடத்துவதைத் தடுக்கும்.*

குறிப்பு :—வரி உயர்த்தியது போதாதென்று சர்வ கக்ஷிகளுடைய அபிப்பிராயம். தொழிற்கக்ஷி பிரதிநிதியாக மிஸ்டர் லீஸ் ஸ்மித் ஜுலை 23ல் பின்வருமாறு பேசினார் :—'மனிதனால் தாங்கமுடிந்த வரையில்

வரியை உயர்த்தலாம். சில மாதங்களுக்குமுன் எதிர்பாராதபடி எதையும் கொடுக்கத்தயார்.' ஜயத்தைவேண்டி எந்த வரியும் கொடுக்கத் தயாரேன்றும், ஜயமில்லாமல்போனுல் அடிமைத் தனம் வந்துவிடுமென்றும் ஸர் பேர்ஸ் ஹாரிஸ் சொன்னுர். இன்னமதிகவரி போடப்படுமென்று நினைத்ததாகவும், ஸர்க்கார் வட்டி 100-க்கு 1 அல்லது ½-வீதத்துக்குக் குறைத்து விடலாமென்றும் மிஸ்டர் பெரிக் லாரன்ஸ் (தொழிற்கக்ஷி மெம்பர்) காமன்ஸ் ஸபையில் ஆகஸ்ட் 6-ம் தேதி பேசினுர்.

9. *பிரிடிஷ் கப்பல்கள் பிரிடிஷ் கடலில் வரமுடியாமல் போனுல், பிரிடனுக்கு உணவு முதலிய அவசியமான சாமான்கள் வரமுடியாது.*

குறிப்பு:—வரமுடியாமல் போனுல்தானே?

10. *ஊர் விலைக்கு அதிகமாகக் கொடுத்து கோதுமை ஏராளமாக கானடாவிலிருந்து பிரிடன் வாங்கப்போகிறது. அதிகவிலை கொடுத்து வாங்கக்காரணம் ஆர்ஜெண்டினு தேசம் தன் கோதுமையை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று தடுத்து விட்டது ஒன்று; ஆஸ்திரேலியாவிலிருந்து கோதுமை வர கப்பல் இல்லாதது மற்ருென்று.*

குறிப்பு:—கானடாவிலிருந்து கோதுமை வாங்குவதற்கு உண்மையான காரணங்கள் பின் வருமாறு:—(1) பிரிடனுடைய திருப்திகரமான செல்வ நிலை (2) கானடாவின் மனமார்ந்த ஒற்றுழைப்பு (3) பிரிடிஷ் கடல் ஆதிபத்தியம் (4) ஜேர்மனி பிரயத்தனிக்கும் முற்றுகையில் பிரிடனுக்கிருக்கும் அலக்ஷியமும், உதாசீனமும். அப்படியானுல் ஆகஸ்ட் 3-ல் 'அக்கரையிலிருந்து கோதுமை வரத்தை பிரிடன் நிறுத்திவிட்டது' என்று ஜேர்மனி ஒலி பரப்பக் காரணமென்ன?

8—8—40.

11. *பிரிடிஷ் விமான நஷ்டத்தை ஈடு செய்ய அமெரிக்காவிலிருந்து விமானங்களை வாங்குகிருர்கள்—விமானிகளின் குறைவுகளை ஈடு செய்ய விமானப் பயிற்சி காலத்தை 60 மணியிலிருந்து 20 மணிக்குக் குறைத்து விட்டார்கள். அனுபவம் வாய்ந்த ஜெர்மன் விமானிகளைப் பார்த்தவுடன் இந்தப் புது பிரிடிஷ் விமானிகள் சண்டை செய்யாது திரும்பி விடுகிருர்கள்.*

குறிப்பு:—ஜூலை 15-ல் துணையோடு சென்ற டச்சு வியாபாரக் கப்பல்களை எதிர்த்த ஜேர்மன் விமானங்களுக்கும், அதைத் தடுத்த பிரிடிஷ் விமானங்களுக்கும் ஏற்பட்ட சண்டையை நேரில் பார்த்த டச்சு மாலுமிகள் பின்வருமாறு வர்ணிக்கிருர்கள்:—"66 ஜேர்மன் விமானங்கள் தாக்கியதெல்லாம் கால் மணி நேரம்தான்.

உடனே பிரிடிஷ் விமானங்கள் வந்து விட்டன. ஆகாயச் சண்டையை நாங்கள் நேராகப் பார்த்தோம். ஜேர்மன் விமானங்களுக்கு வேகமாக ஓட்டம் பிடிக்கக்கூட முடிய வில்லை; 15-ம் புள்ளிக் காய்களைப்போல் ஒன்றன்பின் ஒன்ருய் வீழ்ந்து விட்டன. பிரிடிஷ் ஸ்பிட்பைர் விமானங்கள் அவைகளை நாலாபக்கங்களிலும் வளைத்துக்கோண்டு, அவைகளுக்கிடையே பாய்ந்தன. 'தோப்பு, தோப்பே' ன்று ஜேர்மன் விமானங்கள் கடலில் வீழ்வதைப் பார்ப்பது வேடிக்கைக் காக்ஷியாய் இருந்தது.''

12. *பெல்ஜியத்தில் ஜெர்மன் துருப்புகள் நடத்தையைப்பற்றி, பத்திராதிபர் சபையில் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்தானிகர் அறிக்கையொன்றை சமர்ப்பித்தார். அப்போது அவர் சொன்னது, 'நான் ஜெர்மனிக்கக்ஷியல்ல. ஆனுல் நடப்பைச் சொல்லுகிறேன். ஜெர்மன் துருப்புகள் நடத்தை ஆக்ஷேபத்திற்கு இடமில்லை. ஒருவிதமான ஹிம்ஸையும் செய்யவில்லையென்று பெல்ஜிய மக்கள் யாவரும் ஒப்புக்கொள்ளுகிருர்கள்'.*

குறிப்பு:—யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்தானிகரான மிஸ்டர் குடாய் ப்ரஸல்ஸை விட்டு ஜூலை 15-ம் தேதி புறப்பட்டார். உத்தியோக முறை யில்லாது, ஆகஸ்ட் 6-ம் தேதி லண்டனில் கூடிய பத்திராதிபர் சபையில், ஜேர்மன் எதிர்ப்பால் பெல்ஜியத்துக்கு ஏற்பட்ட தீங்குகளை எடுத்துரைத்தார். பேல்ஜியத்தில் தொழில்களேல்லாம் நின்று விட்டதாயும், பிரான்ஸுக்கு ஓடி ஒளிந்தவர்களில் 20-லக்ஷம் பேல்ஜியர்கள் இன்னும் திரும்பவில்லையேன்றும், அறுப்புக்காலம் வந்தும், அறுவடைக்கு ஆளில்லையென்றும், தங்கள் படையெடுப்பால் நேரிட்ட துன்பங்களைத் தீர்த்துவைக்க ஜேர்மானியர்கள் பிரயத்தனங்கள் ஒன்றும் எடுத்துக்கொள்ள வில்லையென்றும், ஜேர்மன் துருப்புகள் அளவு மீறி ஒன்றும் செய்யவில்லை என்றும், துருப்புகளைப்பற்றிய புகார் ஒன்றுமில்லை என்றும், ஜேர்மானியரோடு சேர பேல்ஜியருக்கு மனமில்லை என்றும், பிரிடனும் அதன் நேயர்களும் முடிவில் ஜயிப்பதில் பூர்ண நம்பிக்கையோடு இருப்பதாகவும், எடுத்துச் சொன்னுர்.

13. *"பிரிடன் ஆகாரப்பொருள்கள் குறைவால் கஷ்டப்படுகிறது; பிரிடிஷ் டொமினியன் நாடுகள் அளவுக்கு மிஞ்சிய உணவுப்பொருள்கள் வைத்துக்கொண்டு ஏற்றுமதி செய்யமுடியாமல் தவிக்கின்றன."*

குறிப்பு:—ஆகஸ்டு 10-ம் தேதி வட அமெரிக்காவிலிருந்து பிரிடனுக்கு சரக்குகள் ஏற்றிக்கோண்டு 1,000 கப்பல்கள் போனதாக நியூயார்க் செய்தி வேளியிடுகிறது.

9—8—40.

14. இந்திய சமுத்திரத்திலிருந்து செங்கடலுக்குப்போகும் முகத்துவாரத்தில் ஏடன் இருப்பதாயும், அதை எதிர்க்க ஸீலா முக்கியமான இடமென்றும், ஸீலாவை இதாலியர் பிடித்து விட்டதாயும் 'கயர்னேல் டி இதாலியா' பத்திரிகை சொல்லுகிறது.

குறிப்பு:—செங்கடலில் மூன்று இதாலிய நீர்மூழ்கிகள்தானிருக்கின்றன. வியாபாரக்கப்பல்களை எதிர்க்கக்கூட பயப்படுகின்றன. செங்கடலில் பயமொன்றுமில்லையென்று கருதி, ஸவுதி-அராபிய கவர்ன்மெண்டு, யாத்திரைக் கப்பல்களைத் தடையின்றி அனுப்புகிறது. (ரேடியோ-ஸைகான்—ஆகஸ்ட் 9-ம் தேதி).

15. "எல்லா உணவுப் பொருள்களும் ஜெர்மனியிலிருந்து பிரான்ஸுக்கு அனுப்பப்படுகின்றன. வேண்டிய சாமான்கள் தவறாது கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன."

குறிப்பு:—பிரான்ஸ் தேசம் இப்பொழுது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஜெர்மானியர் வசமிருக்கும் பாகம் ஒன்று, 'விஷி' கவர்ன்மெண்டு அதிகாரத்திலிருக்கும் பாகம் ஒன்று. ஜெர்மானியர் இல்லாத பாகத்தில் கோடிக்கணக்கான அயல் நாட்டார்கள் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். பிரான்ஸில் விளையும் 8-ல் 7 பங்கு தானியங்கள் ஜெர்மன் பாகத்தில்தான் விளையும். நல்ல கோதுமை, இறைச்சி, பால், வெண்ணெயெல்லாம் ஜெர்மானியர் கைக்குள்ளிருக்கின்றன. உடன்படிக்கை (Armistice) 17-ம் பிரிவுப்படி ஜெர்மன் பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு உணவுப் பொருள்கள் போகக்கூடாது. இந்தச் சட்டத்தை மாற்ற வேண்டிய அவசியத்தைப்பற்றி லெஜூர் என்ற ஜெர்மன்-பிதேன் கக்ஷிப் பத்திரிகையே சொல்லுகிறது.

10—8—40.

16. ஜெர்மன் ராணுவ இலாகா கேட்டுக்கொள்ள ஸ்வீடன் பத்திரிகை நிருபர் ஒருவர் இங்கிலீஷ் கால்வாயை வேவுபார்க்கச்சென்றார். அவர் எழுதியதாவது, "கால்வாய் ஜெர்மன் விமானப்படை ஆதிபத்தியத்தில் இருப்பது சந்தேகமில்லை. நான் வெகுநேரம் பார்த்துக்கொண்டிருந்தேன். எதிரி விமானங்களைக்காணோம். திடீரென்று நான்கு விமானங்கள் தோன்றின. நான் வியாபார விமானத்தில் இருந்ததால் பயந்தேன். ஆனால் கடவுள் கிருபையால், வந்த விமானங்கள் ஜெர்மன் விமானங்களே."

குறிப்பு:—(1) வழக்கம்போல் ஜெர்மன் முறைப்படி நிருபர் பெயரும், பத்திரிகை பெயரும் கொடுக்கவில்லை.

(2) 'எதிரி' விமானமென்று சொல்லும் நிருபர் நடுநிலைமை வகிக்க முடியாது.

(3) வெகு நேரம் தங்கியிருந்தும் நான்கு ஜேர்மன் விமானங்களைத்தான் பார்த்தாராம். நான்கு விமானங்களை வைத்துக் கொண்டு கடல் ஆதிபத்தியம் எப்படி வரும்? ஆனால் கடைசியாகச் சொல்லும் செய்தியே ரஸமானது. 'பிரிடன் கடற்கரை சவக்குழியைப் போல் நிசப்தமாயிருந்தது' என்று சொல்லிவிட்டு, அநேக நீர்மூழ்கிகளையும், காவல் கப்பல்களையும், யுத்தக்கப்பல்களையும் அங்கு பார்த்ததாகவும் சொல்லுகிறார்

17. *"பிரிடிஷ் படைகளை மேற்கு முனையில் ஜெர்மனி தோற்கடித்தபோது பிரிடன் தான் ஜெயிக்கப்போவதாகத்தான் சொல்லிக்கொண்டது."*

குறிப்பு:—மேற்கு முனையில் ஜெர்மனி பிரிடனைத் தோற்கடிக்கவில்லை. சரணகதி செய்யாவிட்டால் நாசம் செய்வோமென்று ஜெர்மனி சொல்லிற்று. நாசமாகாமல், இருந்த இடத்தைக் காலி செய்துவிட்டு, பிரிடிஷ் சைன்யம் ஊருக்குத் திரும்பியது. இந்த அசாத்தியமான காரியத்தை பிரிடன் செய்து முடித்தது.

11—8—40.

18. *"ஜெர்மன் செஞ்சிலுவை விமானமொன்றை பிரிடிஷ் விமானங்கள் இரண்டு சுட்டுவிட்டன."*

குறிப்பு:—செஞ்சிலுவை அடையாளத்தைப் போட்டுக்கொண்டு, வேவு காரியங்களுக்கும், ராணுவ ஒத்தாசைக்கும் விமானங்களை ஜெர்மானியர் உபயோகப்படுத்துவதாக ஜூலை 30ல் பிரிடிஷ் ஆகாய இலாகாவுக்குச் செய்தி கிடைத்தது. இந்த விமானங்களிலிரண்டு சுட்டுத்தள்ளப்பட்டன. சேனபதி டிட்லருக்கும், அவர் கீழ் அதிகாரிக்கும் சமாசாரப் போக்குவரத்துக்காக விமானம் உபயோகிக்கப்படுவதாக விமானங்களில் ஒன்றில் தஸ்தாவேஜில் டயரி (Log-book) யில் கண்டிருந்தது. ஸினிமாவுக்குப் போய்ப் படங்கள் தயாரிக்க உபயோகப்படுவதாயும் தெரிந்தது. படம்பிடிக்கும் காமரராப் பெட்டியோடு பிரயாணிக்கப்பலில் ஸ்வீடன் தேச பத்திராதிபர் ஒருவர் ஆகஸ்ட் 10ல் பறந்து சென்றதாகவும் செய்தி கிடைத்தது.

12—8—40.

19. *"ஜெர்மானியர் நியாயமாய், நேர்மையாய் நடந்துகொள்ளுவார்கள். நல்ல சுபாவம்; பிறர்களுக்கும் தங்களுக்கும் வித்தியாசம் பாராட்ட மாட்டார்கள்."*

குறிப்பு:—(1) நார்டிக் ஜாதியார் வாயைமூடிக்கொண்டே, ஆகாரத்தை மென்று தின்பார்கள், பிறர்கள் மிருகங்களைப்போல் ஓசை செய்து சாப்பிடுவார்கள்.

(2) வாஸ்ஜிஸ் நதியிலிருந்து ரஷியாவரையிலும், பால்டிக் கடலிலிருந்து ஏட்ரியாடிக் கடல்வரையிலுமுள்ள மத்திய ஐரோப்பாவில் வசிக்க ஜேர்மானியரே பாத்தியப்பட்டவர்கள்; அவர்கள்தான் மத்திய ஐரோப்பாவில் கலப்பில்லாத சுத்த ஜாதி, பெரிய ஜாதி.

(3) ஜெர்மனிக்கு எது நன்மைசெய்வதோ அதுவே நியாயம்; அவர்களுக்கு எது தீங்குசெய்வதோ அதுவே அநியாயம்.

(4) ஐரோப்பாவும், உலகமும் பற்றி எரிந்தால் எங்களுக்கென்ன?

இதாலியப் பொய்கள்.

7—8—40.

20. *பிரிடனுக்குப் புது விமானங்கள் அமெரிக்காவில் செய்து வரவேண்டி இருக்கின்றது. விமானங்கள் கொஞ்சம்கூடப் போதாது.*

குறிப்பு:—ஜேர்மனியில் மாதத்துக்கு **1,800** விமானங்கள் கட்டுவதாகத் தெரிகிறது, நாம் அதற்குமதிகமாகவே கட்டுகிறோம், மேலும் கானடாவிலிருந்தும், யுனைடெட்ஸ்டேட்ஸிலிருந்தும் விமான வரத்து அதிகமாய்க்கொண்டிருக்கிறது.

9—8—40.

21. *நேற்று, கால்வாயில் துணையோடு சென்ற கப்பல்களை ஜெர்மன் விமானங்கள் தாக்கி 55,000 டன் நிறையுள்ள 12 கப்பல்களை மூழ்கடித்தன.*

குறிப்பு:—மற்றொரு ஒலிபரப்பில் **88,000** டன் என்று சொல்லுகிறார்கள். உண்மையில் **5,039** டன் நிறையுள்ள **5** கப்பல்கள் தான் நஷ்டம்.

10—8—40.

22. *உபயோகமற்ற 50-நாசகாரிகளை பிரிடனுக்குக் கொடுக்க ஆக்ஷேபிக்கிறார்கள்.*

குறிப்பு :—கொடுக்க நினைக்கும் கப்பல்கள் உபயோகமற்றவையல்ல: வயதானவை.

23. *டி கால் சைன்யத்தைச் சேர்ந்த கப்பல்களிலும், விமானங்களிலும் பறக்கவேண்டிய கொடியைப்பற்றி பிரிடிஷ் கடற்படை இலாகா ஒலி பரப்பியிருக்கிறது.*

குறிப்பு :—டி காலோடு சேர்ந்தவர்கள் **4, 5** பேர்கள்தானே. ஒலிபரப்ப அவசியமென்ன ?

12—8—40.

24. *இதாலிக்கும் அல்பேனியாவுக்கும் மனத்தாங்கல் அதிகப்படுவதாக பிரிடிஷ் ஒலிபரப்பு சொல்லுகிறது. ஆனால் எங்களுக்குள் சிநேகம் குறையவில்லை.*

குறிப்பு :—ஆகஸ்டு **11**-ல் பெல்க்ரேடிலிருந்து லண்டனுக்கு வந்த செய்தியில் பின் வருமாறு கண்டிருக்கிறது :—" **9**-ம் தேதி அதாவது வெள்ளிக்கிழமை சாயங்காலம், அல்பேனியா, இதாலிய துருப்புகள் கைகலந்தன. அல்பேனியரை ராணுவத்தில் சேரச் சொன்னதும், ஆடு முதலிய ஆகாரப்பொருள்களைப் பலவந்தமாய்க் கொடுக்கச்சொன்னதும் தான் மனஸ்தாபத்துக்குக் காரணம். நடந்த சண்டையில் இதாலியரில் **100** பேர்கள் இறந்தார்கள். **3,000**த்திலிருந்து **5,000** வரை அல்பேனியர்கள் கலகம் செய்ததாகப் பிரஸ்தாபம். இதாலியத்துருப்புகள் அல்பேனியாவுக்கு வந்துகொண்டிருக்கின்றன.

25. *இப்போதைய கணக்கு விகிதம், பிரிட்டிஷ் கப்பல்கள் ஒவ்வொரு நாளும் சேதமாய்க் கொண்டு வந்தால் பிரிடிஷ் கப்பல் படையே ஒழிந்து விடும்.*

குறிப்பு :—இப்போதுபோலவே ஜேர்மன் ரேடியோ பொய்சொல்லிக் கொண்டுபோனால் ரேடியோவே தீப்பிடித்து ஒழிந்துவிடும்.

PROGRAMME OF LECTURES

OF THE

Pudukkottai War Information Bureau.

LECTURE VIII.

1940—

August	31, Saturday ...	Town Hall	...	6.30 p. m.
September	1, Sunday ...	Virachalai	...	5.00 p. m.
	2, Monday ...	College	...	10.25 a. m.
		Rani's School	...	10.30 a. m.
		Viralimalai	...	5.30 p. m.
		Nachandupatti	...	5.00 p. m.
	3, Tuesday ...	C. S. M. School	...	10.00 a. m.
		Rayavaram	...	5.00 p. m.
		Alangudi	...	5.00 p. m.
		Keeranur	...	5.00 p. m.
	5, Thursday ...	Ramachandrapuram	...	5.00 p. m.
		Kilanilai	...	5.00 p. m.

LECTURE IX.

	7, Saturday ...	Town Hall	...	6.30 p. m.
	8, Sunday ...	College (2) Tamil	...	10.25 a. m.
		Arimalam	...	5.30 p. m.
		Vehupatti	...	5.30 p. m.
	9, Monday ...	Rani's School	...	10.30 a. m.
		Yembal	...	5.30 p. m.
		Konapet	...	5.30 p. m.
	10, Tuesday ...	C. S. M. School	...	10.00 a. m.
		College (1) English	...	10.25 a. m.
		Tirumayyam	...	5.30 p. m.
		Vendampatti	...	5.30 p. m.
		Ponnamaravathi	...	5.30 p. m.
	12, Thursday ...	Teachers' Association.		3.30 p. m.
		Annavasal	...	5.30 p. m.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,850—31-8-40.